## தேசிய வேளாண் வளர்ச்சி: தமிழகத்துக்கு ரூ.225 கோடி

First Published : 05 Jun 2010 02:28:59 AM IST



சென்னை, ஜூன் 4: விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தேசிய வேளாண் வளர்ச்சிக்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிதியில் தமிழகத்துக்கு ரூ.225 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுக்க இத் திட்டத்தின் கீழ் ரூ.6755 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் மக்களின் முதலீட்டை அதிகரிக்கச் செய்யும் மாநில அரசுகளை ஊக்கப்படுத்துதல் மற்றும் இதன் மூலமாக மாநில அரசுகளை சிறப்பாக செயல்பட வைத்தல், வளர்ச்சிப் பாதைக்கு ஏற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வேளாண் துறையில் வளர்ச்சியை ஏற்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 67.15 அடி

First Published : 04 Jun 2010 10:36:06 AM IST

ஈரோடு, ஜூன் 3: பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை 67.15 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 847 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 900 கன அடி வீதம் தண்ணீ ர் திறக்கப்பட்டுள்ளது. அணை நீர் இருப்பு 9 டிஎம்சி.

**செயல் விளக்க திடலுக்கு மானியம்**

First Published : 04 Jun 2010 10:55:24 AM IST

பல்லடம், ஜூன் 3: பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களுக்கு செயல் விளக்கத் திடல் அமைக்க, மானியம் வழங்கப்படுகிறது. இது குறித்து பல்லடம் வேளாண்மை துறை வெளியிட்டுள்ள அறிக்கை:
÷பயறு வகை செயல் விளக்கத்திற்கு ரூ. 2,500 மதிப்பிற்கும், எண்ணெய் வித்து செயல்விளக்கத்திற்கு ரூ. 4 ஆயிரம் மதிப்பிற்கும் இடுபொருட்கள், நிலக்கடலை விதை தவிர்த்து ஏனைய பயிர்களுக்கு சான்று, வீரிய விதைகள், உரம், நுண்ணுயிர் உரம், உயிரியல் பூச்சிக்கொல்லி மருந்துகள் மானியமாக வழங்கப்பட உள்ளன.
÷மேலும் மண்புழு வளர்ப்பு கூடம் அமைக்க ஒரு கூடத்திற்கு ரூ. 6 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேர விருப்பமுள்ள விவசாயிகள் அந்தந்த பகுதி நீர்ப்பாசன சங்க தலைவரை சந்தித்து பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் மேலும் விபரங்களுக்கு வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம்.

**விவசாயிகளுக்கு இலவச மரக்கன்று**

First Published : 04 Jun 2010 10:38:31 AM IST

உதகை ஜூன் 3: தமிழக முதல்வர் கருணாநிதியின் 87வது பிறந்த நாளை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்திலுள்ள உழவர் சந்தைகளில் விவசாயிகளுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.
நீலகிரி மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் தமிழக முதல்வரின் 87வது பிறந்த நாளையொட்டி நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகை, குன்னூர் மற்றும் கோத்தகிரி உழவர் சந்தைகளில் உள்ள அனைத்து உழவர்களுக்கும் இலவசமாக மரக்கன்றுகள் வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.
இதுதொடர்பாக உதகை உழவர் சந்தையில் வியாழக்கிழமை காலை நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துணை இயக்குநர் வி.முரளிதரன் முன்னிலை வகித்தார். தோட்டக்கலை இணை இயக்குநர் இஸ்ரவேல் தலைமையில் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. முதல்வரின் பிறந்த நாளையொட்டி உதகையிலுள்ள உழவர் சந்தை வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.
இந் நிகழ்ச்சியில், தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் ஜெகதீஷ்குமார், ராஜ்கோபு, வேளாண்மை அலுவலர் ரமேஷ், உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமகிருஷ்ணன், லட்சுமணன், பரமசிவன் ஆகியோருடன் விவசாயிகளும், பொதுமக்களும் பங்கேற்றனர்.
நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதகை உழவர் சந்தை நிர்வாக அலுவலர் என்.எம்.சந்திரன் செய்திருந்தார்.

**கேரளத்துக்கு இடம்பெயரும் தேங்காய் எண்ணெய் ஆலைகள்!**

First Published : 05 Jun 2010 03:01:16 AM IST



திருப்பூர்: தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு தமிழக அரசு விதித்துள்ள 5 சதவீத வரி விதிப்பால் காங்கயம் தாலுகாவில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி குறைந்து, ஆலைகளை கேரள மாநிலத்துக்கு கொண்டு செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதனால், தமிழக அரசுக்கு கிடைக்கும் வருவாய் மட்டுமின்றி, பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு இந்திய அளவில் புகழ்பெற்ற இடமாக திருப்பூர் மாவட்டத்துக்கு உட்பட்ட காங்கயம் தாலுகா திகழ்கிறது. தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் கொப்பரை தேங்காய் உலர்வதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை நிலவுவதால் காங்கயம் சுற்றுவட்டாரப் பகுதியில் 200க்கும் மேற்பட்ட தேங்காய் எண்ணெய் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆலைகளுக்கு காங்கயம், உடுமலை, பொள்ளாச்சி, சேலம் மட்டுமின்றி ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் கொப்பரை தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு நாளொன்றுக்கு 50 ஆயிரம் கிலோவுக்கு (50 டன்) அதிகமாக தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த எண்ணெய் இந்தியா மட்டுமின்றி பல்வேறு வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதுடன், இந்தியாவில் தேங்காய் எண்ணெய் வர்த்தகத்தில் மிகவும் பிரபலமான நிறுவனங்களுக்கும் காங்கயத்திலிருந்தே எண்ணெய் சப்ளை செய்யப்படுகிறது.

அதன்படி, காங்கயத்திலுள்ள தேங்காய் எண்ணெய் ஆலைகள் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

இந்நிலையில், கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு கொப்பரை தேங்காயில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு 4 சதவீத உற்பத்தி வரியும், 1 சதவீத செஸ் வரி என 5 சதவீத வரி விதித்தது.

ஆனால், தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் காங்கயத்துக்கு போட்டியாக உள்ள கேரள மாநிலத்தில் எவ்வித வரி விதிப்பும் இல்லை. இதனால், காங்கயம் ஆலைகளுக்கான தேங்காய் எண்ணெய் வர்த்தகம் நாளுக்கு நாள் பாதிக்கப்படுவதுடன் புதிய ஆலைகள் உருவாக்கமும் தடைபட்டு கொண்டிருக்கிறது.

இதையடுத்து, தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு மாநில அரசு விதித்துள்ள வரி விதிப் பை விலக்கிக் கொள்ளவோ அல்லது அதை 2 சதவீதமாக குறைக்கவோ வேண்டி எண்ணெய் ஆலை உற்பத்தியாளர்கள் கடந்த பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், இவ்விஷயத்தில் அரசு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இதனால், பாதிக்கப்பட்டுள்ள காங்கயம் தேங்காய் எண்ணெய் ஆலை உரிமையாளர்கள் தங்களது தேங்காய் எண்ணெய் ஆலைகளை கேரள மாநிலத்துக்கு இடமாற்றம் செய்து வருகின்றனர்.

அதன்படி, தமிழகத்தில் கொப்பரை தேங்காய்களை கொள்முதல் செய்து அவற்றை எண்ணெய்யாக உற்பத்தி செய்வதை மட்டும் கேரளத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதனால், தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய வருவாய் பாதிக்கப்படுவதுடன், பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலைவாய்ப்பும் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து காங்கயம் தேங்காய் எண்ணெய் ஆலை உரிமையாளர்கள் கூறுகையில், தொடர்ந்து பல ஆண்டுகளாக வரி விதிப்பை நீக்கக் கோரி மாநில அரசிடம் கோரிக்கை விடுத்தும் பலனில்லை. ஆனால், அண்டை மாநிலமான கேரளத்தில் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளதால் அங்கு உற்பத்தி செலவு குறைந்து வர்த்தக வாய்ப்பு அதிகரித்து வருகிறது. இதைக்கருத்தில் கொண்டே காங்கயம் ஆலை உரிமையாளர்கள் தங்களது தேங்காய் எண்ணெய் ஆலைகளை கேரளத்தில் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இந்திய அளவில் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் முதலிடம் பிடித்துள்ள காங்கயம் தாலுகா மாநில அரசின் வரி விதிப்பால் தன் புகழை இழந்து வருவதுடன், வேலைவாய்ப்பும் குறைந்து வருகிறது. முழுமையாக தேங்காய் எண்ணெய் உற்பத்தி கேரள மாநிலத்துக்கு செல்லும் முன்பு மாநில அரசு போதிய கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

தினமலர்

**விலை உயர வாய்ப்புள்ளதால் வெங்காயம் பயிரிட்டால் லாபம்**

ஈரோடு: தமிழகத்தில் சிறிய வெங்காயம் விலை உயர வாய்ப்புள்ளது. எனவே, விவசாயிகள் இப்பருவத்தில் சிறிய வெங்காயம் பயிரிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் 2008-09ல் 77.29 லட்சம் டன் வெங்காயம் 5.54 லட்சம் ஹெக் டேரில் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழகம், ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் மட்டுமே சிறிய வெங்காயம் உற் பத்தி செய்யப்படுகிறது.

ஈரோடு வேளாண் துணை இயக்குனர் (வணிகம்) பரமசிவம் கூறியதாவது: சிறிய மற்றும் பெரிய வெங்காயம் உற்பத்தியில் 23 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுவதால், குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை பொறுத்து உள்நாட்டு விலை மாறுபடும். 2009 டிசம்பரில் சின்ன வெங்காயம் ஒரு கிலோ 22 ரூபாய்க்கு விற்றது. மார்ச், ஏப்ரலில் கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து வரத்து அதிகமானதால், ஒரு கிலோ 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதனால், விவசாயிகள் பீதியடைந்தனர். ஆனால், கர்நாடகா வரத்து ஏப்ரல்

மாதத்தில் முடிவடைந்து விட்டது. தமிழகத்தில் தை பட்டத்தில் விதைத்த வெங்காய அறுவடை தற்போது துவங்கியுள்ளது. தேசிய கூட்டுறவு வேளாண் சந்தைகளின் கூட்டமைப்பு ஏப்ரல் மாதம் தென் மாநில ரகங்களுக்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மெட்ரிக் டன்னுக்கு 416 அமெரிக்க டாலராக குறைத்துள்ளது.

குறைந்தபட்ச ஏற்றுமதி விலை மற்றும் சில இடங்களில் பரவலாக பெய்யும் கோடை மழை ஆகியவற்றால், வெங்காய் விலை ஏறுமுகத்தில் இருக்கும். உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் ஆய்வுகளின் படி, நல்ல தரமான வெங்காயத்தின் பண்ணை விலை ஜூனில் கிலோவுக்கு 13 முதல் 15 ரூபாய் வரை இருக்கும். அறுவடை சமயத்தில் பல்லடம், திருப்பூர், உடுமலை மற்றும் கோவை பகுதியில் மழை பெய்தால் பண்ணை விலை கிலோவுக்கு 15 ரூபாயை தாண்ட வாய்ப்புள்ளது. அதிகப்படியான வெப்பம் மற்றும் குறைந்த காற்றோட்டத்தால் தற்போது அறுவடை செய்யப்படும் வெங்காயம் சேமித்து வைக்க உகந்தது அல்ல. சேமிப்பில் 30 சதவீதத்துக்கும் மேல் இழப்பு ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த வெங்காயத்தை சேமித்து வைக்காமல் உடனடியாக விற்பனை செய்வது நல்லது. மே, ஜூனில் வெங்காயம் பயிர் செய்து, ஆகஸ்ட், செப்டம்பரில் அறுவடை செய்யும் போது, சிறிய வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைக்கும். இப்பருவத்தில் சிறிய வெங்காயம் பயிரிடுவது நல்லது. இவ்வாறு அவர் கூறினார்.

**தஞ்சை விவசாயிகளுக்கு மின்வாரியம் வேண்டுகோள்**

தஞ்சாவூர்: ""விவசாயிகள் விவசாய தேவைகளுக்கு மும்முனை மின்சாரத்தை மட்டும் பயன்படுத்துங்கள்," என் தஞ்சை மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் தங்கராஜு வேண்டுகோள் விடுத்தார். மின்வாரியத்தில் தஞ்சை மின் பகிர்மான  வட்டத்தில் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கும் நேரங்களை தவிர்த்து சில விவசாயிகள் இரு முனை மின்சாரம் வழங்கும் நேரங்களில் மின் மோட்டார்களை இயக்குகின்றனர். இதனால், மின்சாரம் வழங்குவதில் இடர்பாடும், மின்வாரியத்துக்கு இழப்பும், மின் மாற்றிகளில் பழுதும் ஏற்படுகிறது. இதை தவிர்க்கும் பொருட்டு  விவசாய மின் இணைப்புகளை மின்வாரிய பொறியாளர்களுடன் ஆய்வு செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆய்வின்போது, இருமுனை மின்சாரம் வழங்கும் நேரங்களில் மின்மோட்டர்கள் இயங்குவது கண்டறியப்பட்டால் அபராதத்தொகையுடன் மின் இணைப்பு துண்டிப்பு செய்யப்படும். எனவே, மின் பகிர்மான வட்ட விவசாயிகள் இருமுனை மின்சாரம் வழங்கும் நேரங்களில் மின் மோட்டார்களை இயக்காமல் மின்வாரியத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி, அவர் கேட்டுக் கொண்டார்.

**ஹை-டெக் மானியம் பெற வேளாண் அதிகாரி அழைப்பு**

நாமக்கல்: விவசாயிகளுக்கு பழச்செடிகள் மற்றும் நுண்ணீர் பாசனம் ஹை-டெக் மானியத் திட்டத்தில் வழங்கப்படுகிறது என்று  புதுச்சத்திரம் தோட்டக்கலை உதவி இயக்குனர் சந்திரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள  செய்திக்குறிப்பு:  நாமக்கல் அடுத்த புதுச்சத்திரம் வட்டாரத்தில் பரவலாக பெய்து வரும் கோடை மழையை பயன்படுத்தி  பழச்செடிகள் நடவு செய்து பயன்பெறலாம். ஒரு ஹெக்டேர் நிலத்துக்கு மாங்கன்று 100, சப்போட்டா 160, நெல்லி 275 போதுமானது. தமிழக அரசு தற்போது ஹை-டெக் திட்டத்தின் கீழ் பழச்செடிகள் சாகுபடியை அதிகரிக்க பழச்செடிகள் நடவு செய்து நுண்ணீர் பாசனம்

அமைப்பதற்கு 65 சதவீதம் மானியம் வழங்க உள்ளது. பழச்செடிகள் நடவு செய்து நுண்ணீர் பாசனம் அமைக்க விருப்பம் உள்ள இதர மற்றும் ஆதிதிராவிட விவசாயிகள் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலை துறையிடம் முன்பதிவு செய்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கறவைமாடு, வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி: விண்ணப்பிக்க அழைப்பு**

நாமக்கல்: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை தொலைநிலைகல்விப் பிரிவு விரிவாக்கக் கல்வி இயக்ககம் சார்பில் கறவை மாடு, வெள்ளாடு வளர்ப்பு குறித்து மூன்று மாத மற்றும் ஆறு மாத பயிற்சி அளிக்கப்பட உள்ளது என்று இயக்குனர் கதிரேசன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
இப்பயிற்சிக்கு விண்ணப்பம் செய்வோர் 18 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். பயிற்சி தமிழில் அளிக்கப்படும். 8ம் வகுப்பு மற்றும் கறவைமாடு, வெள்ளாடு வளர்ப்பில் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும்.

பயிற்சி பெற விரும்புவோர் சுய முகவரியிட்ட கவர் மற்றும் 20 ரூபாய்க்கு அஞ்சல் ஆணை, தபால் வரைவோலையை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் த டைரக்டர் ஆப் எக்ஸ்டன்சன் எஜூகேசன், தமிழ்நாடு வெட்னரி அண்டு அனிமல் சயின்ஸ் யுனிவர்சிட்டி, மாதவரம் மில்க் காலனி, சென்னை 600 051 என்ற பெயருக்கு எடுக்க வேண்டும். அதே பெயருக்கு விண்ணப்பதுடன், டி.டி.,யை அனுப்ப வேண்டும். விண்ணப்பம் பெறக் கடிதம் அனுப்பும்போது எந்த பயிற்சியில் சேர விருப்பம் என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு பயிற்சிக்கும் தனித்தனியாக விண்ணப்பக் கட்டணம் எடுக்க வேண்டும். விண்ணப்பங்கள் இம்மாதம் 30ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். 044-25554375, 25551586, 25551587 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு இதுகுறித்த தகவல் பெறலாம் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மரக்கன்று வழங்கல்**

தேவகோட்டை: முதல்வர் கருணாநிதி பிறந்த நாளை முன்னிட்டு, உழவர்சந்தையில் 50 விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. சந்தை நிர்வாக அலுவலர் செல்வராஜ், வேளாண் அலுவலர் குப்புச்சாமி, உதவி அலுவலர் காசிநாததுரை பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு இலவச மரக்கன்று வழங்கும் விழா**

கரூர்: கரூர் உழவர்சந்தையில் வேளாண் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு தமிழக முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு இலவச மரக்கன்று வழங்கும் விழா நடந்தது. விவசாயிகளுக்கு கலெக்டர் (பொ) முனிரத்தினம் புங்கை மற்றும் வேப்பமர கன்றுகளை வழங்கினார். கரூர், வேலாயுதம்பாளையம், குளித்தலை, பள்ளப்பட்டி ஆகிய நான்கு இடங்களில் உழவர் சந்தை அமைக்கப்பட்டு செயல்படுகிறது. சந்தைகளில் வேளாண்மை பொரு ள் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு இலவசமாக வேம்பு மற்றும் புங்கை மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. உழவர் சந்தை ஒன்றுக்கு 50 மரக்கன்றுகள் வீதம்

நான்கு சந்தைக்கும் 200 மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. வேளாண்மை இணை இயக்குனர் சோபா, உழவர் சந்தை வேளாண் அலுவலர் கணேசன், உழவர் சந்தை வேளாண்மை உதவி அலுவலர் மகாவிஷ்ணு, மனித உரிமைகள் கழக முன்னாள் மாவட்ட துணை தலைவர் வெங்கட்ராமன் உடனிருந்தனர்.

**"லைலா' புயல் பாதிப்பில் மீண்டது உப்பு உற்பத்தி**

ராமநாதபுரம்: "லைலா' புயலின் பாதிப்பிலிருந்து மீண்ட நிலையில் மீண்டும் ராமநாதபுரம் பகுதியில் உப்பு உற்பத்தி தொடங்கியுள்ளது. பருவ மழைக்கு பின் கோடை தொடங்கிய நிலையில் கடலோர மாவட்டங்களில் உப்பு உற்பத்தி மாதங்களை கடந்த நிலையில் தொடங்கியது. இம்முறை வழக்கத்தை விட அதிக அளவில் வெயில் இருந்ததால் உப்பளங்களில் வேலை ஜரூராக நடந்தது. ஜூலையில் உப்பு தட்டுபாடு இருக்கும் என்ற கணிப்பை மாற்றும் அளவுக்கு உப்பு உற்பத்தி நடந்து கொண்டிருந்தது.

இதற்கிடையில் திடீரென லைலா' புயல் மையம் கொண்டதால், பலத்த காற்றும், மழையும் சூழ்ந்தது. எதிர்பாராத இந்த நிலையால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. அதன் உற்பத்தியாளர்களும் சோகம் அடைந்தனர். தொடர்ந்து புயல் வேறு வழியாக கரையை கடந்தது. இருந்தும் தொடர்ந்து குளிர்ந்த காற்றே வீசி வந்தது. அக்னி நட்சத்திரம் முடிந்த நிலையில் பருவ தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது வெயில் கோடை போல கொளுத்தி வருகிறது.

இதனால் மீண்டும் உப்பளங்களில் உற்பத்தி களை கட்டியுள்ளது. குறிப்பாக வெளியூர்களுக்கு விற்பனைக்கு அனுப்பபடும் உப்புகளுக்கான ஆர்டர் குவிந்து வருகிறது. எதிர்பாராத விதமாக அமைந்த இந்த இயற்கை சூழலால் உப்பு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ள நிலையில், விற்பனையில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

**நெற்பயிர்களை காப்பாற்ற சோத்துப்பாறை அணை திறப்பு**

தேவதானப்பட்டி: கருகி வரும் நெற்பயிர்களை காப்பாற்ற சோத்துப் பாறை அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டுள்ளது. மேல்மங்கலத்தில் வராகநதியில் வரும் நீரை வடுகபட்டி வெள்ளக்கரடு அணை அருகில் தடுப் பணை கட்டி தனி வாய்க்கால் மூலம் நீர் கொண்டுவரப்பட்டு நெல் சாகுபடி நடந்து வருகிறது. தற்போது 600 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டாம் போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கதிர் வெளியேறி பால்பிடிக்கும் பருவத்தில் உள்ளது. இதனால் அதிகமான நீர் தேவைப்படும். கடும் வறட்சி நிலவி வருவதால் ஆற்றில் நீர் வரத்து முழுமையாக நின்று விட்டது. இந்நிலையில் கருகும் நெற்பயிர்களை காப்பாற்ற சோத்துப்பாறை அணையில் இருந்து நீர் திறக்க வேண்டும் என வராகநதி ராஜவாய்க்கால் பசான விவசாயிகள் சங்க தலைவர் வெங்கடசுப்பிரமணியன், நெடுங்குளம் கண் மாய் பசான சங்க தலைவர் லட்சுமணன் ஆகியோர் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கைவிடுத்தனர்.

இதையடுத்து தண்ணீர் திறக்க உத்தரவிடப்பட்டது. பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் குமார் கூறுகையில், "மேல் மங்கலம் விவசாயிகள் சாகுபடி செய்துள்ள நெற்பயிர்களை காப்பாற்றுவதற்காக பத்து நாட்களுக்கு சோத்துப்பாறை அணையில் இருந்து நாள் ஒன்றுக்கு ஏழு கன அடி வீதம் நீர் திறக்கப்பட்டுள்ளது' என்றார்.

**பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளுக்கு சலுகை**

தேனி: பயிர் காப்பீட்டு திட்டத்தில் விவசாயிகளுக்கு கூடுதல் சலுகை வழங்கப்பட்டுள் ளது என கலெக்டர் முத்துவீரன் தெரிவித் துள்ளார். அவர் கூறுகையில், பயிர் காப்பீட்டு திட்டத் தில் நெல், கம்பு, சோளம், மக்காச்சோளம், ராகி, உளுந்து, பச்சை பயிறு, துவரை, நிலக்கடலை, எள், கரும்பு, பருத்தி, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், இஞ்சி, மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு, வாழை ஆகிய பயிர் களை காப்பீடு செய்யலாம்.

குத்தகைக்கு விவசாயம் செய்பவர்களும் பயன் பெறலாம். பயிர்க்கடன் பெறுவோர், நகைக்கடன் பெறுவோர் மட்டுமின்றி விருப்பத்தின் அடிப்படையில் பயன் பெறலாம். விவசாயிகள் தங்கள் விருப் பத்தின் பெயரில் கூடுதலாக காப்பீட்டு தொகை செலுத்தி சராசரி மகசூலின் 150 சதவீதம் மதிப்பு வரை காப்பீடு செய்து கூடுதல் பலன் பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நோய் அல்லது பரவலான பாதிப்புகள் காரணமாக ஒரு பகுதியில் ஒரு விவசாயிக்கு கணிக்கப் பட்ட மகசூல், உத்திரவாத மகசூலை காட்டிலும் குறைவாக இருந்தால் அப்பயிரை சாகுபடி செய்த அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பு ஏற்பட்டதாக கருதப்பட்டு அனைவருக்கும் நிதியுதவி வழங்கப்படும் என்றார்.

**தோட்டக்கலை திட்டங்களுக்கு பயனாளிகள் தேர்வு மும்முரம்**

தேனி: தோட்டக்கலைத்துறையில் தேசிய தோட்டக்கலை இயக்கம், துல்லிய பண்ணை திட்டங்களுக்கு மாநிலம் முழுவதும் பயனாளிகள் தேர்வு நடந்து வருகிறது. தோட்டக்கலைத்துறையில் மா, நெல்லி, கோகோ, முந்திரி புதிய பரப்பு சாகுபடி செய்வதற்கு தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தில் ஹெக்டேருக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும்.

தவிர துல்லிய பண்ணை திட்டத்தில் ஒரு ஹெக்டேருக்கு 31 ஆயிரத்து 200 ரூபாயும், நுண்ணீர் பாசன திட்டத்தில் 37 ஆயிரத்து 440 ரூபாயும் ஆக மொத்தம் 68 ஆயிரத்து 640 ரூபாய் வழங்கப்படும். ஒரு விவசாயிகளுக்கு அதிகபட்சம் நான்கு ஹெக்டேருக்கு மானியம் கிடைக்கும். இந்த மானிய தொகை முழுவதும் இடுபொருட்களாகவே வழங்கப்படும். தேவை அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

கனகாம்பரம், மல்லிகை போன்ற உதிரி மலர் சாகுபடி திட்டத்தில் ஹெக்டேருக்கு 12 ஆயிரம் ரூபாய், சம்மங்கி மலர் சாகுபடிக்கு 45 ஆயிரம் ரூபாய், மிளகாய் சாகுபடிக்கு 12 ஆயிரத்து 500 ரூபாய் மானியம்

வழங்கப்படுகிறது. தகுதியுள்ள விவசாயிகள் அந்தந்த ஒன்றியங்களில் உள்ள தோட்டக்கலை துணை இயக்குனர் அலுவலகத்தில் சிட்டா, அடங்கல், நில வரைபடம், ரேஷன் கார்டு ஜெராக்ஸ், பாஸ்போர்ட் அளவு போட்டோவுடன் அணுகி விண்ணப்பிக்கலாம்.

**பால் உற்பத்தியாளர்களின் தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்க கமிஷனர் உத்தரவு**

திண்டுக்கல்: ""பால் உற்பத்தியாளர்களின் தேவைக்கேற்ப, அவற்றை பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என பால்வளத்துறை கமிஷனர் அபூர்வ வர்மா பேசினார்.

திண்டுக்கல் தொழிற்பேட்டையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள, பால் குளிரூட்டும் கருவிகளை பால்வளம் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை கமிஷனர் அபூர்வ வர்மா பார்வையிட்டார். பின்னர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், பால்வளத்துறை அதிகாரிகளுக்கான ஆய்வு நடத்தப்பட்டது. இதில் அவர் பேசியதாவது: தற்போது மாவட்டத்தில் 42 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டு முழுவதும் 50 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் அளவிற்கு அதிகரிக்க வேண்டும். இதற்கு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களை சந்திக்க வேண்டும். அவர்களின் குறை, தேவைகளை கண்டறிந்து, அவற்றை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் பாங்குகளுடன் இணைந்து பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய, கடன் வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

கூட்டுறவு சங்கங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு, மானிய விலையில் பால் கேன்கள் வாங்கிக் கொடுப்பது உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்த வேண்டும். கொழுப்புச் சத்து மிக்க பால் உற்பத்தி செய்வதற்கு, அவ்வப்போது தேவையான ஆலோசனைகளை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். கலெக்டர் வள்ளலார், பால்வளத்துறை துணை பதிவாளர் நாகராஜன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு அனுபவ சுற்றுலா**

மதுரை: தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் சேடபட்டி வட்டார விவசாயிகள், அனுபவ சுற்றுலாவாக, பிற மாவட்ட பண்ணைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சேடபட்டி ஊராட்சித் தலைவி வளர்மதி, விவசாயிகளை ஒருங்கிணைத்தார். தோட்டக்கலை பயிர்களின் மகசூலை பெருக்க, ஒட்டுபழமரக்கன்றுகள் உற்பத்தி செய்தல், நடவு, சாகுபடி உத்திகள், ரகத் தேர்வு, உப்புத்தண்ணீரில் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடுதல், பயிர் எண்ணிக்கை பராமரிப்பு, சொட்டுநீர்ப் பாசனம், துல்லியப் பண்ணையம் ஆகிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி வரும் பிற விவசாயிகளின் பண்ணைகளை பார்வையிட்டனர்.

தோட்டக்கலை உதவி இயக்குனர் முத்தம்மாள் கூறுகையில்,"" பிற விவசாயிகளின் நடைமுறை அனுபவங்களை நேரடியாக கேட்டறிவதால், விவசாயிகள் தங்கள் தோட்டத்தில், நிலத்தில் பயிர் செய்யும் முறையை மாற்றிக் கொள்கின்றனர். விவசாயிகள் இலவசமாக வெளியிடங்களுக்கு அழைத்துச்

செல்லப்பட்டனர்," என்றார். தோட்டக்கலை அலுவலர் பாண்டி, உதவி அலுவலர் மச்சத்தேவன் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

**தேங்காய் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிப்பு விலை நிர்ணயம் செய்ய கோரிக்கை**

கடையநல்லூர் : தொடரும் தேங்காய் விலை வீழ்ச்சியினை அடுத்து தென்னை விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். கரும்புக்கு விலை நிர்ணயம் போன்று தேங்காய்க்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் விவசாயிகளின் பிரதான சாகுபடியாக தென்னை சாகுபடி விளங்கி வருகிறது. இதனை பொறுத்தவரை மாவட்டத்தின் மேற்கு பகுதிகளில் அமைந்துள்ள தென்காசி, செங்கோட்டை, சிவகிரி, வீரகேரளம்புதூர் ஆகிய தாலுகாகளில் அமைந்துள்ள பகுதிகளில் அதிகமாக தென்னை பயிரிடப்பட்டுள்ளது. குறிப்பாக தென்காசி, செங்கோட்டை, அச்சன்புதூர், பண்பொழி, கடையநல்லூர், புளியங்குடி, காசிதர்மம், வடகரை உள்ளிட்ட பல பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளிலிருந்து பெறப்படும் தேங்காய்கள் வெளி மாவட்டங்களுக்கும், மகாராஷ்டிரம், உத்திரபிரதேசம், பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறப்பு பெற்ற தென்னை சாகுபடியின் நிலை ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தியில் மட்டுமின்றி அதற்கான விலை நிர்ணயத்திலும் சரிவைத் தான் ஏற்படுத்தி வருகிறது. நல்ல தரம் கொண்ட தேங்காய் ஒன்றின் விலை 5 ரூபாய் என விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டு வந்த விலை தற்போது 3.25 ரூபாய்க்கு தான் பெறப்படுகிறது.

இரண்டாம், மூன்றாம் தரம் கொண்ட தேங்காய் ஒன்றின் விலை 2.25 ரூபாய் என்று தான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் தேங்காய் வெளி மார்க்கெட்டில் 3.50 ரூபாய் என விற்கப்படுகிறது. தரம் கொண்ட தேங்காய் 4.50 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

இந்நிலையில் உற்பத்திக்கு ஏற்ற விலை இல்லாததால் தேங்காய் சாகுபடி விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். தொடர்ந்து கடந்த சில மாதங்களாக தென்னை சாகுபடி விவசாயிகள் அதனை சாகுபடி செய்ய கூடிய செலவுத் தொகையை கூட பெற முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் புலம்பி வருகின்றனர்.

கரும்புக்கு விலை நிர்ணயம் செய்தது போன்று தேங்காய்க்கும் தமிழக அரசு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தும் விவசாயிகளின் கோரிக்கை தற்போதும் வலுப்பெற்றுள்ளது. தென்னை சாகுபடி நலன் பாதுகாத்திட அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தாமதப்படும் பட்சத்தில் தென்னை சாகுபடி மேலும் பாதிக்கப்படும் என விவசாயிகள் சார்பில் கூறப்பட்டு வருகிறது.

பிளாட்டுகளாக மாறி வரும் தென்னந்தோப்புகள்... : தென்னையை நட்டால் இளநீர், பிள்ளையை பெற்றால் கண்ணீர் என்பார்கள். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக தொடரும் விலை குறைவு மற்றும் உற்பத்தி பாதிப்பு போன்றவற்றால் தென்னை விவசாயிகள் கண்ணீர் வடிக்கும் நிலைதான் இருப்பதாக தென்னை விவசாயிகள் பலர் புலம்பி வருகின்றனர்.

தொடரும் விலை வீழ்ச்சி காரணமாக நெல்லை மாவட்டத்தில் தென்னை சாகுபடிக்கு புகழ்பெற்ற பகுதிகளில் அமைந்துள்ள தென்னந்தோப்புகள் சில பகுதிகளில் பல நூறு ஏக்கர் அழிக்கப்பட்டு வீட்டு மனைகளாக மாறி வருகின்றன. இந்த நிலை தொடருமானால் இன்னும் சில ஆண்டுகளில் தேங்காய் ஏற்றுமதி செய்து வந்த பெருமை மாறி இறக்குமதி செய்யக்கூடிய நிலை தான் ஏற்படும் என்கின்றனர் தென்னை விவசாயிகள்.

---

## *நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் கரும்பு சாகுபடி பரப்பளவு 30% உயரும் என மதிப்பீடு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*மும்பை*
*நடப்பு 2010–11 பருவத்தில் கரும்பு சாகுபடி பரப்பளவு 30 சதவீதம் உயர வாய்ப்புள்ளது என ஆலைகள் மற்றும் சர்க்கரைத் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.*
*அறுவடை பணிகள்*
*கரும்பு என்பது ஒரு நீண்ட கால பயிராகும். இது, தென் மாநிலங்களில் ஜனவரி, பிப்ரவரி, ஜூலை, ஆகஸ்டு ஆகிய மாதங்களில் பயிரிடப்படுகிறது. வட மாநிலங்களில் பிப்ரவரி, மார்ச், அக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய மாதங்களில் பயிர் செய்யப்படுகிறது. அறுவடைப் பணிகள் அக்டோபர்–செப்டம்பர் மாத காலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.*
*நம் நாட்டில் உத்தரபிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இரண்டு மாநிலங்கள் கரும்பு உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. இந்த இரண்டு மாநிலங்களிலும் ஒரு ஹெக்டேர் வாயிலாக உற்பத்தி செய்யப்படும் கரும்பு 55 டன்னிலிருந்து 65 டன்னாக அதிகரித்துள்ளது*
*மகாராஷ்டிரா மாநிலத்தில், 2010–11–ஆம் ஆண்டுக்கான அரவைப் பருவத்திற்கான கரும்பு விதைப்பு பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டன.*
*முதல் கட்ட ஆய்வு*
*முதல் கட்ட ஆய்வுகளின்படி இங்கு கரும்பு சாகுபடி பரப்பளவு, சென்ற பருவத்தைக் காட்டிலும் 25 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது பயிரிடும் பரப்பளவு 8 லட்சம் ஹெக்டேரிலிருந்து 10 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது என மகாராஷ்டிரா*

மாநிலத்தின் கரும்பு ஆணையாளர் ராஜேந்திர சவான் தெரிவித்தார். நடப்பு ஆண்டில் மேலும் அதிக விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஆர்வம் காட்டுவார்கள் என அவர் மேலும் கூறினார்.
நாட்டின் கரும்பு உற்பத்தியில், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மூன்று மாநிலங்களின் ஒட்டுமொத்த பங்களிப்பு 70 சதவீதமாக உள்ளது.
மகாராஷ்டிரா
மகாராஷ்டிராவில், பெரும்பாலான விவசாயிகள், ஜூன் மாதத்தில் (பருவமழை தொடங்கும்போது) விதைப்பு பணிகளை தொடங்குகின்றனர். ஆனால் உத்தரபிரதேசத்தில் பிப்ரவரி–மே மாத காலத்திலும், அதற்குப் பிறகு செப்டம்பர்–அக்டோபர் மாத காலத்திலும் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இம்மாநிலத்தில் இதுவரை கரும்பு பயிரிடும் நிலப்பரப்பு 14 சதவீதம் உயர்ந்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் சாகுபடி பரப்பளவு 20 சதவீதம் அதிகரித்துள்ளது.
சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டின் கரும்பு உற்பத்தி, அதற்கு முந்தைய பருவத்தைக் காட்டிலும் 1.3 சதவீத அளவிற்கே உயர்ந்துள்ளது. அப்பருவத்தில் கரும்பு உற்பத்தி 27.47 கோடி டன்னாக இருந்தது. நடப்பு ஆண்டில், மே மாதம் 28–ந் தேதி வரை விவசாயிகள் சுமார் 43 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்துள்ளனர். இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 41 லட்சம் ஹெக்டேராக இருந்தது.

## சான்று பண்ணை அமைக்க தேவையான விதை ரகங்கள் எது?

## உதவி இயக்குனர் விளக்கம்

---

கோவை, ஜூன்.5–
உணவு உற்பத்தி திட்டம் சிறப்பாக செயல்பட எல்லா இடுபொருட்களையும், சாகுபடி உத்திகளையும் நன்கு நிர்வகிக்க வேண்டும். இந்த மூலம் கிடைக்கும் முழு பயனையும் பெறுவதில் முதல் இடம் வகிப்பது நல்ல விதை ஆகும்.
விவசாயிகள், தற்போது தொடங்க உள்ள பருவமழையை பயன்படுத்தி பயறுவகைகளை சாகுபடி செய்வது ஏற்ற தருணமாகும். எனவே விதை உற்பத்தியாளர்கள் மற்றும் சாகுபடியாளர்கள் உளுந்து சாகுபடியில் நல்ல தரமானதாக அறிவிக்கப்பட்ட ரகங்களான வம்பன்–1, வம்பன்–3, வம்பன்–4,ஏடிட்டி–5 ஆகிய ரகங்களையும், பாசிபயிறு சாகுபடியில் கோ–6, சி–152, கோசிப்பி–7 ஆகிய ரகங்களை தேர்வு செய்து சான்று பண்ணை அமைத்து பயிறுவகை உற்பத்தியை அதிகரிக்கலாம். இதன் மூலம் அதிக லாபம் கிடைப்பதுடன் கூடுதல் பயனையும் பெறலாம்.
இந்த விதை பண்ணைகளை அமைக்க தேவையான ஆதார விதைகள் பெற விரும்பும் விதை உற்பத்தி மற்றும் சாகுபடியாளர்கள் கோவை மாவட்டத்தில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு விதைகளை பெற்று பயன்பெறலாம்.
மாவட்ட விதை சான்று உதவி இயக்குனர் பழனிக்குமார் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

முதுமலையில்

# மணம் வீசும் தேன் கூடுகள்

மசினகுடி, ஜூன்.5–

முதுமலை காட்டில் உள்ள மரங் களில் தேன் கூடுகள் அதிகமாக காணப் படுகிறது.

## முதுமலை

சிறந்த சுற்றுலா தலமாக விளங்கும் முது மலையில் யானைகள், புலிகள், சிறுத் தைகள், மான்கள் போன்றவன விலங்குகள் மட்டுமின்றி ஏராளமான விலை உயர்ந்த மரங்களும் உள்ளன.

இங்கு நாள்தோறும் நூற்றுக்கணக் கான உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள். இவர்களை வனத்துறையினர் வாகனங்கள், யானைகள் ஆகியவற்றின் மூலம் சவாரி அழைத்துசென்று வனப்பகுதியை சுற்றி காண்பித்து வருகிறார் கள்.

## தேன் கூடுகள்

வன விலங்குகளை கண்டு மகிழும் சுற்றுலா பயணிகள் வனப்பகுதிகளில் உள்ள உயரமான மரங்களில் தேனீக்கள் கட்டியுள்ள தேன் கூடுகளையும் கண்டு மகிழ்ச்சியுடன் திரும்பி செல் கிறார்கள். குறிப்பாக மலை தேன், குச்சி தேன், கொம்பு தேன் உள்பட பல்வேறு வகை யான தேன் கூடுகள் முதுமலை வனப்பகுதியில் காண முடிகிறது.

மருத்துவ குணம் மிக்க இந்த தேன் கூடுகள் கக்கநல்லா–தொரப்பள்ளி சாலை ஓரங்களில் இருக்கும் உயரமான மரங்களில் ஏராளமாக உள்ளன. இந்த மரங்களில் மலை தேனீக்கள் தேன் கூடுகளை கட்டி வருகின்றன.

## 50க்கும் மேல் கூடுகள்

வட்ட வடிவில் பெரியதாக கட்டியுள்ள தேன் கூடுகள் ஒரு மரத்திற்கு ஒன்றை தான் பார்த்திருக்கிறோம். ஆனால் முதுமலை சாலையோரங்களில் உள்ள மரங்களில் ஒரே மரத் தில் சுமார் 50 தேன் கூடுகளுக்கு மேல் தேனீக்கள் கட்டியுள் ளன.

இதனால் சாலையில் செல்லும் போது தேனின் மணம் வீச தொடங்கி உள்ளது. இதனை ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் புகைப்படம் எடுப்பதுடன் வியப்புடன் கண்டுகளித்தும் செல்கின்றனர்.

குறிப்பாக தெப்பக்காடு, பாம்பெக்ஸ் பகுதிகளில் சாலை ஓரத்தில் உள்ள 2 மரங்களில் உள்ள நூற்றுக் கணக்கான தேன் கூடுகள் ஆண்டு முழுவதும் இருப்ப துடன், மணம்வீசியும்வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.



முதுமலை காட்டில் ஒரு மரத்தில் காணப்படும் தேன் கூடுகளை படத்தில் காணலாம்.



ஊட்டி கின்னஸ் பூங்காவில் நடவு செய்யப்பட்டுள்ள சோலை மரக்கன்றை சுற்றி வளர்ந்துள்ள களை செடியை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியரை படத்தில் காணலாம்.

# ஊட்டி கின்னஸ் பூங்கா புதுப்பொலிவு பெறுமா?

ஊட்டி, ஜூன்.5–

ஊட்டி கின்னஸ் பூங்கா புதுப்பொலிவு பெறுமா? என்று கேள்வி எழுந்துள்ளது.

## கின்னஸ் பூங்கா

மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் நீலகிரியின் இயற்கை அழகை யும், இயற்கை சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கின்னஸ் பூங்கா கடந்த 2002–ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

2002–ம் ஆண்டு ஜூலை மாதம் அன்றைய கலெக்டர் சுப்ரியா சாகு எடுத்த கடும் முயற்சியால் ஊட்டி அருகே குருத்துக்குளி கிராமத்தின் பக்கத்தில் வனத்துறைக்கு சொந்தமான பகுதியில் ஒரே நாளில் 42 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்று நடப்பட்டன. இதனைதொடர்ந்து இந்த பூங்கா கின்னஸ் மர பூங்கா என்ற பெயரில் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றது.

## காய்ந்து விட்டன

இந்த பூங்கா நீலகிரி மாவட்ட தெற்கு கோட்ட வனத்துறை அதிகாரி கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு 2002–ம் ஆண்டு நடவு செய்யப்பட்ட 42 ஆயிரம் மரக்கன்றுகளில் பல ஆயிரம் மரங்கள் பட்டுவிட்டன. தற்போது சுமார் 15 ஆயிரம் மரங்கள் மட்டும் பூங்காவில் உள்ளது.

கின்னஸ் பூங்கா பகுதியில் கடமான்கள் அதிகம் உள்ளதால் நடப்பட்ட மரக்கன்றுகளை கடமான் உணவாக சாப்பிட்டுவிட்டன. மேலும் குளிர் காலத்தில் பனிப் பொழிவு ஏற்படுவதால் சில மரக் கன்றுகள் காய்ந்து விட்டன. இதன் காரணமாக இந்த பூங்கா பொலிவிழந்து காணப் பட்டது.

## 10 ஆயிரம் மரக்கன்றுகள்

கின்னஸ் சாதனைக்காக ஏற்படுத்தப்பட்ட இந்த பூங்கா மீண்டும் புதுப் பொழிவு பெற வேண்டும் என்று சமூகநல ஆர்வலர்கள் கோரிக்கைவிடுத்துவந்தனர். இதனை கருத்தில் கொண்டு வனத்துறை அதிகாரிகள், பனியில் பாதிக் காத சீகை, கற்பூரம் மரக்கன்று கள் உள்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளும் 2005–ம் ஆண்டில் நடவு செய் யப்பட்டன. அதனை தொடர்ந்து மீண்டும் அந்த பூங்கா பராமரிப்பின்றி காணப்பட்டது.

நடப்பட்ட 40 ஆயிரத்துக் கும்மேற்பட்ட மரக்கன்றுகள் முழுமையாக பராமரிப்பு இல்லாததால் அவைகள், காய்ந்தும், மான்களுக்கு உணவாகவும் போய் விட்டன. கின்னஸ் சாதனைக்காக மட்டும் மரக்கன்றுகள் நடப்பட் டனவா? அல்லது சுற்றுச் சூழலை பாதுகாக்க மரக் கன்றுகள் நடப்பட்டனவா? என்று சமூகநல ஆர்வலர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

மரக்கன்றுகள் இன்று வரை இருந்திருந்தால் இந்த 8 ஆண்டுகளில் அவைகள் ஓரளவு மரங்கள் ஆகி இருக் கும். அந்த இடமும் அழகாக காட்சி அளித்து இருக்கும்.

## 500 மரக்கன்றுகள்

தற்போது கின்னஸ் பூங்கா வில் எஞ்சி இருக்கும் மரக் கன்றுகளை வனத்துறை ஊழியர் ஒருவர் பராமரித்து வருகிறார். இதனால் அந்த மரக்கன்றுகள் மட்டும் அழி வில் இருந்து தப்பி உள்ளன.

இந்த நிலையில் பள்ளி குழந்தைகள் இடையே மரம் வளர்ப்பதையும்,சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வனத்துறையினர் முடிவு செய்துள்ளனர். இதன்படி கவர்னர் சோலை ரேஞ்சர் லாரன்ஸ் தலைமை யில் குருத்துக்குளி புனிதசேவியர் நடு நிலைப்பள்ளி மாணவ–மாணவிகள் இன்று (சனிக் கிழமை) கின்னஸ் பூங்காவில் 500 மரக் கன்றுகள் நடவு செய்கின்றனர். இந்த மரக் கன்றுகளாவது தொடர்ந்து பராமரிக்கப் படுமா? அல்லது மான்களுக்கு உணவாகுமா?..